செ.வெ.எண்: 08 / செப்டம்பர் நாள் : 05.09.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

# பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்பிக்கும் வகையில் மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் விளையாட்டுப் போட்டிகள் வருகின்ற 08.09.2017 அன்று நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மாவட்ட அளவிலான சைக்கிள் போட்டிகள் 08.09.2017 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கத்தின் முன்பாக நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15-ஆம் நாள் காலஞ்சென்ற தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்பிக்கும் வகையில் அண்ணா சைக்கிள் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இப்போட்டிகளை சிறப்பாக நடத்திடும் வகையில் அண்ணா மிதிவண்டி போட்டிகள் மாவட்ட அளவில் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட அளவிலான சைக்கிள் போட்டிகள் 08.09.2017 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கத்தின் முன்பாக நடைபெறவுள்ளது.

இப்போட்டியானது 13,15,17 வயதுக்குட்பட்ட மாணவ/மாணவிகளுக்கு மூன்று பிரிவுகளாக நடத்தப்படும். போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ/மாணவியர்கள் தங்கள் சொந்த செலவில் சைக்கிளை கொண்டு வருதல் வேண்டும். இந்தியாவில் தயாரான மிதிவண்டிகள் மட்டுமே இருத்தல் வேண்டும். மாணவ/ மாணவியர்கள் போட்டி துவங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னரே போட்டி நடத்தப்படும் இடத்திற்கு வயது சான்றிதழுடன் வந்தடைதல் வேண்டும்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணாக்கர்கள் தங்களது பிறப்பு சான்றிதழ் நகலை தாங்கள் பயிலும் பள்ளியின் தலைமையாசிரியர் / தலைமையாசிரியை அவர்களின் சான்றொப்பம் பெற்று சமர்ப்பித்திட வேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடம் பெறுபவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும். முதல் 10 இடம் பெறுபவர்களுக்கு தகுதி சான்றிதழ் வழங்கப்படும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**